## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### மூன்றாம் வருட கலைமாணித் தேர்வு - 2006/2007 (வெளிவாரி)
### (ஏப்ரல்/மே 2009)

LIBRARY
07 APR 2009
Eastern University, Sri Lanka

### TL 301 ஈழத்துத் தமிழ் இலக்கியம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. "ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கெனத் தனிப்பட்ட வரலாறு உள்ளது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

02. ஈழத்துப் பூதன்தேவனாரை ஈழத்துப் புலவராகக் கொள்வதிலுள்ள சிக்கல்கள் குறித்துப் பரிசீலிக்குக.

03. போர்த்துக்கேயர் **அல்லது** ஒல்லாந்தர் கால இலக்கியப்பண்புகளைத் தெளிவுபடுத்துக.

04. (அ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் இடம்பெற்ற பதிப்பு முயற்சிகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(ஆ) ஈழத்துப் பதிப்பாசிரியர் ஒருவரின் பதிப்பு முயற்சிகள் குறித்து மதிப்பிடுக.

05. "ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளின் சிறுகதைகள் புராண, இதிகாச, வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

06. 'ஈழத்து நாவல்களில் அறுபதுகளின் பின்னரே ஈழத்து மக்களது வாழ்க்கை இடம்பெற்றது' என்று கூறலாமா? ஆராய்க.

07. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட ஈழத்து நவீன கவிதைப் போக்குகளை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரு** விடயங்கள் பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.

i. ஈழத்து நவீன நாடக வளர்ச்சி (1900 – 1950)
ii. அறுபதுகளுக்குப் பின்னர் ஈழத்து விமர்சன வளர்ச்சி
iii. முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
iv. ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளான மஹாகவியும் நீலாவணனும்

(20x5=100 புள்ளிகள்)

*********